செய்தி வெளியீடு எண்:084 நாள் :19.02.2015

## செய்தி வெளியீடு

இந்திய அரசு தொலைதொடர்புத் துறையின் குவைத் நாட்டு திட்டப் பணிகளுக்கு தொலைதொடர்புத் துறையில் பணிபுரிய 3 வருடங்களுக்கு செல்லத்தக்க பாஸ்போர்ட் மற்றும் 50 வயதிற்குட்பட்டு டிப்ளமோ தேர்ச்சியுடன் 3 வருட அனுபவம் பெற்ற சிவில் மேற்பார்வையாளர்கள், 8ஆம் வகுப்பு தேர்ச்சியுடன் 5 வருட பணி அனுபம் உள்ள கொத்தனார்கள் மற்றும் சமையலர்கள், துவக்கப்பள்ளி தேர்ச்சியுடன் 5 வருடம் அனுபவம் பெற்ற லேபர்கள், 8ஆம் வகுப்பு தேர்ச்சியுடன் 3 வருட பணிஅனுபவம் பெற்ற ரிக்கர் பணி அறிந்த லேபர்கள் மற்றும் டிப்ளமோ தேர்ச்சியுடன் சிவில் பிரிவில் 5 வருட அனுபவம் பெற்ற ஆட்டோகாட் இயக்குபவர்கள் தேவைப்படுகிறார்கள்.

மேலும், குவைத் நாட்டில் இரண்டு வருடம் பணிபுரிந்து 30 மாதங்களுக்கு செல்லத்தக்க பாஸ்போர்ட் மற்றும் குவைத் ஓட்டுநர் உரிமம் வைத்துள்ள இலகு ரக மற்றும் கனரக வாகன ஓட்டுநர்கள் தேவைப்படுகிறார்கள். குவைத் நாட்டிலிருந்து இந்தியாவிற்கு திரும்பி வந்த பிறகு இரண்டு வருடம் நிறைவு பெற்றிருக்க வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு தகுதி மற்றும் அனுபவத்திற்கேற்ற ஊதியத்துடன் இலவச விசா, விமான டிக்கெட், இருப்பிடம் மற்றும் இதர சலுகைகள் வேலையளிப்போரால் வழங்கப்படும்.

எனவே, தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பம், கல்வி, அனுபவம், பாஸ்போர்ட் ஆகியவற்றின் இரண்டு நகல்கள், வெள்ளை நிறப் பின்னணியில் எடுக்கப்பட்ட 6 புகைப்படம் மற்றும் ஒரிஜினல் பாஸ்போர்டுடன் 26.2.2015/27.2.2015/28.2.2015 ஆகிய ஏதாவது ஒரு நாளில் காலை 8.00 மணிக்கு, எண்.42, ஆலந்தூர் சாலை, ஒருங்கினைந்த வேலைவாய்ப்பு அலுவலக வளாகம், திரு.வி.க. தொழிற்பேட்டை, சென்னை 600 032 என்ற முகவரியிலுள்ள தமிழக அரசு நிறுவனமான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு நேரில் வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்கள் அறிய 044–22502267/22505886/08220634389 என்ற தொலைபேசி எண்கள் அல்லது www.omcmanpower.com என்ற இணையதளத்திலும் அறியலாம்.

நிர்வாக இயக்குநர்
அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
சென்னை

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**